பக்கங்கள் 16 + 06

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## குறைகின்றது மின் கட்டணம்



மின்சாரக்கட்டணத்தை ஜூலை முத லாம் திகதி முதல் குறைக்கவுள்ள தாக விடயத்துக்குப் பொறுப்பான 04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 வைகாசி 24 வியாழக்கிழமை 06.06.2024 அதிர்வு 311

# எதிர்க்கட்சித் தலைவர் சஜித் யாழ். விஜயம்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அவர் 13 ஆம் திகதி வியாழக்கிழமை வரை யாழ்ப்பாணத்தில் தங்கி நின்று பல தரப்பினரையும் சந்திக்கவுள்ளார்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி தொகுதி பிரதம அமைப்பாளர் மரியதாஸ் மரியசீலன் தலைமையில் கிளி.பாரதி வித்தியாலயம், யாழ்ப்பாணம் தொகுதி பிரதம அமைப்பாளர் வெற்றிவேலு யஜேந்திரன் தலைமையில் யா.வைத்தீஸ்வரா கல்லூரி, நல்லூர் தொகுதி பிரதம அமைப்பாளர் 04



# தமிழ் மக்கள் விரும்பும் தீர்வை வழங்கத் தயார்

### சஜித் பகிரங்க அறிவிப்பு

"நான் ஜனாதிபதியாகத் தெரிவானால் இலங்கையின் இறையாண்மையைப் பாதிக்காத வகையில் தமிழ் மக்கள் விரும்பும் தீர்வை வழங்கத் தயாராக இருக்கின்றேன்" - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், 04

## உலகப் பொருளாதார உச்சி மாநாட்டில் பங்கேற்க சுவிஸ் பறந்தார் சிறீதரன்



தமிழ் தொழில்முனைவோர் மற்றும் தொழில் வல்லுநர்களின் உலகளாவிய 13 ஆவது பொருளாதார உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளவதற்காக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சுவிட்சர்லாந்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

தமிழர்களின் எதிர்காலப் பொருளாதாரம் குறித்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்குடன் தமிழ் 04



## தமிழ் பேசும் மக்களின் ஆதரவு ரணிலுக்கே!

### ஐ.தே.க. நம்பிக்கை

"தமிழ், முஸ்லிம் மக்களில் பெரும்பாலானவர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கே ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு வழங்குவார்கள்." 04

## தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் நலன் கருதி

# சிறுபான்மை இன நலன் ஆணைக்குழுவை நிறுவ அரசமைப்பு ரீதியில் ஏற்பாடு செய்க!

## நாடாளுமன்றில் ஹரீஸ் எம்.பி. கோரிக்கை

(நூருல் ஹுதா உமர்)

கல்விசார் நியமனங்களிலும், கல்வி அதிகாரிகள் நியமனங்களிலும் பல பாரபட்சங்கள் நடைபெறுவதாக அறிகிறோம். இது போன்று பல இடங்களிலும் பல்வேறு அசௌகரியங்கள், பாரபட்சங்கள் நடைபெறுகின்றன.

எமது நாட்டிலுள்ள தமிழ் பேசும் மக்கள் அவற்றை மேன்முறையீடு செய்யவும், விரைவான தீர்வுகளை பெறவும் "சிறுபான்மை இன நலன் ஆணைக்குழு" ஒன்றை நிறுவ அரசமைப்பு ரீதியாக ஏற்பாட்டை செய்ய வேண்டும்.

இவ்வாறு திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் சபையில் கேட்டுக்கொண்டார்.

நேற்று (05) நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்திய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்



தும் உரை நிகழ்த்திய அவர் தெரிவித்ததாவது,

இப்படியான ஏற்பாடுகள் இந்தியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இருக்கின்றன. எமது நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் நலன் கருதி "சிறுபான்மை இன நலன் ஆணைக்குழு" ஒன்றை நிறுவ நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் முன்வர வேண்டும்.

மிக நீண்ட கால கோரிக்கையாக இருந்து வரும் பொத்துவிலுக்கான தனியான கல்வி வலயத்தை உருவாக்கித் தர வேண்டும்.

அமைச்சரவை அனுமதியுடன் மாகாண சபைகளினூடாக ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுத்து வரும் கல்வி அமைச்சு கிழக்கு மாகாணத்தில் கஷ்டப் பிரதேசங்களில் உள்ள ஆசிரிய வெற்றிடங்களையும் நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அந்தத் தேவையை பூர்த்தி செய்ய அண்மையில் கிழக்கு மாகாண சபை நடவடிக்கை எடுத்திருந்ததும் துரதிர்ஷ்டமாக அந்த நியமனம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கூடுதலான ஆசிரியர்களைக் கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் நியமிக்க விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றார்.



## காத்தான்குடி அல் ஹிறா ம.வியில்

# பரீட்சைக்கு தோற்றிய 9 மாணவரும் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி!

(எம்.எம்.ஜெஸ்மின்)

காத்தான்குடி அல் ஹிறா மகா வித்தியாலயத்தில் 9 மாணவர்கள் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி 9 மாணவர்களுமே பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க தகுதி பெற்றுள்ளனர்.

காத்தான்குடி அல்-ஹிறா மகா வித்தியாலயத்தில் இந்த் முறை க.பொ.த. உயர்தர விஞ்ஞானப் பிரிவில் முதலாம் அமர்வில் தோற்றிய 9 மாணவர்களுமே சித்தியடைந்துள்ளனர்.

இதில் 5 மாணவர்கள் 3ஏ சித்தியைப் பெற்று மருத்துவத் துறைக்கும் 4 மாணவர்கள் விஞ்ஞானப் பிரிவில் ஏனைய துறைகளுக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

குறிப்பாக விஞ்ஞான துறையில் இந்தப் பாடசாலை 100 வீத சித்தி மற்றும் பல்கலைக்கழக பிரவேசத்தை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.






# அமரர் சிவசிதம்பரத்தின் 22 ஆவது நினைவேந்தல்!

தமிழ்த் தலைவர்களில் ஒருவரும் நல்லூர் உடுப்பிட்டித் தொகுதிகளின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றத்தின் முன்னாள் உப சபாநாயகருமான அமரர் மு. சிவசிதம்பரத்தின் 22 ஆவது நினைவு தினம் நேற்று (05) புதன்கிழமை கரவெட்டியில் அனுஷ்டிக்கப்பட்டது.

இதனையொட்டி காலை நெல்லியடி பஸ்நிலைய வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது சிலை அமைந்துள்ள இடத்தில் கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தைச் சேர்ந்த எஸ். சிவசுப்பிரமணியம் தலைமையில் அஞ்சலி நிகழ்வு இடம் பெற்றது.

இதில் முதல் நிகழ்வாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசிய கட்சி பொது செயலாளருமான எம். கே. சிவாஜிலிங்கம், முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் சட்டத்தரணியுமான கே.சயந்தன் மற்றும் சிவசிதம்பரத்தின் உறவினர்கள், நண்பர்கள், கட்சிகளின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். இதனைத் தொடர்ந்து கரவெட்டி பெரிய தோட்டத்தில் உள்ள அமரர் சிவசிதம்பரத்தின் இல்லத்தில் உள்ள அன்னாரின் சிலைக்கு ஆதரவாளர்கள் மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினர்.





# பசுமை இயக்க உலக சூழல் தின நிகழ்வுகள் தெல்லிப்பளையில்





தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் உலக சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு தெல்லிப்பளையில் நேற்று (05) புதன் கிழமை பசுமை அறிவொளி நிகழ்ச்சியை நடத்தியுள்ளது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் மாணவர்களிடையே சூழல் அறிவைப் புகட்டி விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களைச் சூழல் பாதுகாப்பில் பங்குபற்றுநர்களாக்கும் நோக்குடன் பசுமை அறிவொளி என்ற நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்து வருகிறது.

இதன் தொடர்ச்சியாகவே உலக சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டுத் தெல்லிப்பளை மாவை கலட்டி பொது நோக்கு மண்டபத்தில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது.

உலகம் முழுவதும் பொருத்தமற்ற விவசாய நடவடிக்கைகள், காடழிப்பு, காலநிலை மாற்றம்,வெள்ளப்பெருக்கு, வறட்சி, மண்ணரிப்பு, மண்சரிவு, மண்ணில் கலக்கும் கழிவுகள் போன்ற பல்வேறு காரணங்களால் நிலம் தரம் இழந்து வருகின்றது.

இலங்கையிலும் அதன் மொத்த நிலப்பரப்பில் 34 வீதமான அளவு நிலம் தரமிழந்து உள்ளமை அறியப் பட்டுள்ளது.

உலகின் தலையாய சூழல் பிரச்சினையாக உருவெடுத்துவரும் இதனைக் கருத்தில் கொண்டு ஐக்கிய நாடுகள் சபை இந்த ஆண்டின் சுற்றுச் சூழல் தினத்தின் கருப்பொருளாக ‘ நிலம் மீள்சீரமைப்பு, பாலைவனமாதல் மற்றும் வறட்சியில் இருந்து மீண்டெழுதல்’ என்ற கருப்பொருளைத் தேர்வு செய்துள்ளது.

இந்தக் கருப்பொருளுக்கு அமைவாகத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் இந்த நிகழ்ச்சியில் உரையாற்றி இருந்தார்.

மாவை கலட்டி காந்திஜி சனசமூக நிலையத்தின் தலைவர் பா .நவநேசன், ஆசிரியர் ப. பிரிந்தன் ஆகியோரும் சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவம் தொடர்பாக உரையாற்றியிருந்தனர்.

இந்த நிகழ்ச்சியில் நூற்றுக் கணக்கான மாணவர்கள் கலந்து கொண்டனர்.

பங்கேற்ற மாணவர்கள் அனைவருக்கும் ‘பிளாஸ்ரிக்கின் பிடியில்’ என்ற கைநூல் வழங்கப்பட்டது.

அத்தோடு, றொறன்ரோவின் மனித நேயக் குரலின் அனுசரணையோடு சூழல் விழிப்புணர்வு மேற்கோள்கள் அடங்கிய அப்பியாசக் கொப்பிகளும் வழங்கப்பட்டன.

# கிருந்தை கடலில் மூழ்கி வெளிநாட்டுத் தம்பதி சாவு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாந்தோட்டை, கிருந்தை பகுதியில் கடலில் நீராடிய வெளிநாட்டுத் தம்பதியினர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் 35 வயதுடைய ஆண் மற்றும் 33 வயதுடைய பெண் இந்தியப் பிரஜைகள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடலில் எழுந்த பாரிய அலைகளால் இழுத்துச் செல்லப்பட்டு நீரில் மூழ்கிய நிலையில் மீட்கப்பட்ட இவர்கள், தெபரவெவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் அவர்களது குடும்பத்தினருடன் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தபோது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் கிரிந்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## தமிழ் மக்கள்...

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எனக்கு வெற்றி வாய்ப்பு அதிகம். சிங்கள மக்கள் மாத்திரமின்றி பெரும்பாலான தமிழ், முஸ்லிம் மக்களும் எனக்கான ஆணையை வழங்குவார்கள்.

நான் ஜனாதிபதியாகப் பதவியேற்றவுடன் தற்போதைய நாடாளுமன்றத்தைக் கலைத்து விடுவேன்.

தேர்தல் மூலம் புதிய நாடாளுமன்றம் அமையும். ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியே ஆட்சியமைக்கும்.

புதிய அரசமைப்பைக் கொண்டு வந்து இலங்கையின் இறையாண்மையைப் பாதிக்காத வகையில் தமிழ் மக்கள் விரும்பும் தீர்வை வழங்க நான் தயாராக இருக்கின்றேன்.

இதற்குப் புதிய நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஆளும் – எதிரணி உறுப்பினர்கள் ஆதரவு வழங்குவார்கள் என நம்புகின்றேன்.

எமது அரசில் இனவாதம், மதவாதம் என்ற ரீதியில் பிரச்சினைகள் மீண்டும் ஏற்பட இடமளிக்கமாட்டேன்.

கடந்த காலங்களில் இனவாதத்தாலும் மதவாதத்தாலும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். அந்த நிலைமை இனியும் வேண்டாம். அனைவரும் ஒரே நாட்டு மக்கள்! ஒரு தாய் வயிற்றுப்பிள்ளைகள்!!" – என்றார்.

## குறைகின்றது...

அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

வீட்டு பாவனைக்கான கட்டணத்தில் அதிக சலுகை வழங்கப்படவுள்ளது என்றும் அவர் கூறினார்.

இதற்கான பரிந்துரைகள் அடங்கிய ஆவணம், இலங்கை மின்சார சபையால் நாளை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இதன்படி, 0 – 30 இற்கு உட்பட்ட அலகு ஒன்றின் கட்டணம் 8 ரூபாவில் இருந்து 6 ரூபாவாகவும், 30 – 60 அலகுகளுக்கு இடைப்பட்ட அலகு ஒன்றின் கட்டணம் 20 ரூபாவிலிருந்து 9 ரூபாவாகவும், 60 – 90 இற்கு இடைப்பட்ட அலகு ஒன்றின் கட்டணம் 30 ரூபாவிலிருந்து 18 ரூபாவாகவும், 90 –180 அலகுக்கு உட்பட்ட அலகு ஒன்றின் கட்டணம் 50 ரூபாவிலிருந்து 30 ரூபாவாகவும் குறைக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

## உலகப்...

தொழில்முனைவோர் மற்றும் தொழில் வல்லுநர்களின் உலகளாவிய 13 ஆவது பொருளாதார உச்சி மாநாடு சுவிட்சர்லாந்து நாட்டில் டாவோஸ் நகரில் நடைபெறவுள்ளது.

இந்த உச்சி மாநாடு நாளை 7 ஆம் திகதி தொடக்கம் நாளைமறுதினம் 9 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

உலகத்தின் 40 இற்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து 600 இற்கும் மேற்பட்ட தமிழ் தொழிலதிபர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த மாநாடு பற்றி தெளிவூட்டும் ஆரம்பக் கூட்டம் கடந்த முதலாம் திகதி சுவிஸ்நாட்டில் ஒல்டன் நட்சத்திர விடுதியில் தமிழ் தொழில்முனைவோர் மற்றும் தொழில் வல்லுநர்களின் சுவிட்சர்லாந்துக்கான ஒருங்கிணைப்பாளரும் தலைவருமான கலாநிதி சிறி இராசமாணிக்கம் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இந்த முன்னோடிக் கூட்டத்தில் ஐரோப்பிய சுவிஸ்நாட்டு தொழில்முனைவோர்களும், பல புத்திஜீவிகளும், ஆர்வலர்களும் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கியுள்ளனர்.

தமிழர்களின் டாவோஸ் பொருளாதார மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இலங்கையில் இருந்து 35 இற்கும் மேற்பட்ட தொழில்முனைவோர்கள் கலந்து கொள்கின்றனர்.

அத்துடன் இந்த மாநாட்டின் நிறைவு நாளில் இலங்கையில் இருந்து சுவிட்சர்லாந்துக்குத் தமிழர்கள் இடம்பெயர்ந்த 40 ஆண்டுகளை நினைவுகூரும் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், இந்த மாநாட்டில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானும் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் பேசும்...

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவரும் முன்னாள் அமைச்சருமான அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"யார் என்ன சொன்னாலும் தமிழ் பேசும் மக்களின் வாக்குகளில் பெரும்பாலான விகிதம் ரணில் விக்கிமசிங்கவுக்கே விழும். அதுமட்டுமல்ல ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்குரிய 69 இலட்சம் வாக்கு வங்கியிலும் பெரும்பாலும் ரணில் விக்கிரமசிங்கவுக்கே வரும் என உறுதியாக நம்புகின்றேன்.

இன்னும் தேர்தல் அறிவிக்கப்படவில்லை. ஜனாதிபதியின் தேர்தல் பிரச்சாரம்கூட இன்னும் ஆரம்பமாகவில்லை. அவ்வாறு ஆரம்பிக்கப்படும்போது எமது பலம் தெரியவரும்." – என்றார்.

## எதிர்க்கட்சித்...

அ. கிருபாகரன் தலைமையில் யாஃ சென். பெனடிக்ற் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு தலா 11 இலட்சம் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறைகளை அவர் வழங்கி வைப்பார்.

எதிர்வரும் திங்கட்கிழமை பருத்தித்துறை மற்றும் உடுப்பிட்டி தொகுதிகளுக்கு விஜயம் செய்யும் எதிர்க்கட்சித் தலைவர், யா/கொட்டாவத்தை அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கு தலா 11 இலட்சம் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறைகளை வழங்கி வைப்பார். அன்றைய தினம் காங்கேசன்துறை தொகுதி பிரதம அமைப்பாளர் வன்னிய சிங்கம் பிரபாகரன் தலைமையில் அளவெட்டி யா/அருணோதயாக் கல்லூரிக்கு 11 இலட்சம் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறையை அன்பளிப்புச் செய்யவுள்ளார்.

எதிர்வரும் செவ்வாய்கிழமை எதிர்க்கட்சித் தலைவர், ஊர்காவற்துறை தொகுதி பிரதம அமைப்பாளர் குருபரன் மதன்ராஜ் தலைமையில் யா/நெடுந்தீவு மகாவித்தியாலம், மானிப்பாய் தொகுதி அமைப்பாளர் அனோஜன் அருந்தவநாதன் தலைமையில் யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, யா/புனித. ஹென்றியரசர் கல்லூரி இளவாலை ஆகிய பாடசாலைகளுக்கு தலா 11 இலட்சம் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறைகளை வழங்கி வைப்பார்.

எதிர்வரும் புதன்கிழமை கோப்பாய் தொகுதிக்கு விஜயம் செய்யும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, யா/அத்தியார் இந்துக் கல்லூரிக்கு 11 இலட்சம் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறையை அன்பளிப்பு செய்யவுள்ளார்.

தொடர்ந்து வட்டுக்கோட்டை தொகுதி பிரதம அமைப்பாளர் சதாசிவன் தலைமையில் யா/யாழ்ற்ரன் கல்லூரி காரைநகர் பாடசாலைக்கு 11 இலட்சம் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறையை அன்பளிப்பு செய்யவுள்ளார்.

மேலும், யா/சுழிபுரம் விக்டோரியா கல்லூரிக்கு விஜயம் செய்யும் எதிர்க்கட்சித் தலைவர், பஸ் ஒன்றை அன்பளிப்புச் செய்யவுள்ளார்.

எதிர்வரும் வியாழக்கிழமை சாவகச்சேரி தொகுதி பிரதம அமைப்பாளர் கந்தையா மயில்வாகனம் தலைமையில் யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கிளிநொச்சி தொகுதி அமைப்பளர் மொகமட் காசிம் தலைமையில் கிளி/இரணைதீவு றோ.க.த. க. ஆகிய பாடசாலைகளுக்கு தலா 11 இலட்சம் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறைகளை வழங்கி வைப்பார்.

நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன மற்றும் கட்சியின் பிரதிச் செயலாளர் உமாச்சந்திரா பிரகாஷ் ஆகியோருடன் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் பல சமூக, அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது விஜயத்தின்போது, அரசியல் தலைவர்கள், புத்திஜீவிகள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பலரைச் சந்திக்கவுள்ளார்.

# குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இரண்டாம் கட்ட அரிசி விநியோகம் ஆரம்பம்





**(சர்ஜூன் லாபீர்)**

2023ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் நாட்டில் நிலவிய மிகவும் கடினமான பொருளாதார நிலைமைக்கு மத்தியில் பாதிப்புக்கு உள்ளான குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் ஊட்டச்சத்து மட்டத்தைப் பேணுவதற்கு ஆதரவு வழங்கி அந்த மக்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் முழு நாட்டையும் உள்ளடக்கும் விதமாக குறைந்த வருமானம் பெறும் சுமார் 2.74 மில்லியன் குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்துக்கு ஒரு மாதத்துக்குப் 10 கிலோ கிராம் நாட்டு அரிசியை இரண்டு (02) மாத காலத்துக்கு வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்தது.

இந்த வேலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட அரிசி விநியோகம் தேசிய ரீதியாக நேற்று (05)ஆரம்பித்து வைக்கப்பட்டது.


சம்மாந்துறை பிரதேச செயலர் பிரிவில் சுமார் 12 ஆயிரத்து 157இற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு அரிசி விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது.

சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவின் பிரதான நிகழ்வு நேற்று (05) சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம் முஹம்மது ஹனீபா தலைமையில் சென் நெல் கிராமம் விளையாட்டு அரங்கில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக்க அபேவிக்ரம கலந்து கொண்டு அரிசி விநியோகச் செயற்பாட்டை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வுக்கு விசேட அதிதிகளாக அம்பாறை மாவட்ட பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எச்.பீ.அனீஸ், உதவி பிரதேச செயலாளர் யூ.எல் அஸ்லம், அம்பாறை மாவட்ட கணக்காளர் ஐ.எம் பாரிஸ், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம் அஸ்லம், கிராம சேவகர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மக்கள் மன்றில்
ஈழத் தமிழர் சுயநிர்ணய உரிமை
பொது நிலைப்பாடும்
பொது வாக்கெடுப்பும்
அறிவோர் ஒன்றுகூடும்
அரசியற் கருத்துக் களம்
இடம் : தந்தை செல்வா கேட்போர்கூடம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.
காலம்: 2024.06.09, ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பி.ப. 2 மணி 59 நிமிடம்
அகவணக்கம்
ஈகச்சுடரேற்றல்
வரவேற்புரை
திரு. சந்திரலிங்கம் சுகிர்தன்
(முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்)
தலைமையுரை
கௌரவ சி.வி.கே. சிவஞானம்
(பேரவைத் தலைவர், வடக்கு மாகாண சபை)
தொடக்கவுரை
பேராசிரியர் அருளானந்தம் சர்வேஸ்வரன்
(சட்டபீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்)
கருத்துரைகள்
சிரேஷ்ட சட்டத்தரணி நல்லதம்பி சிறீகாந்தா
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
மருத்துவர் பத்மநாதன் சத்தியலிங்கம்
(முன்னாள் அமைச்சர், வடக்கு மாகாண சபை)
திரு. சபாபதி சுப்பையா குகநாதன்
(சிரேஷ்ட ஊடகவியலாளர்)
ஜனாதிபதி சட்டத்தரணி M.A. சுமந்திரன்
(பாராளுமன்ற உறுப்பினர்)
நிறைவுரை
பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை
(முன்னாள் துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
நன்றியுரை
திரு. இம்மானுவல் தயாளன்
(சமூக செயற்பாட்டாளர்)
நிகழ்ச்சித் தொகுப்பு
சட்டத்தரணி கேசவன் சயந்தன்
(முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்)
Print@Mickey-Chava
021-2-27-17-07
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சஜித்தின் பருப்பு அவியாது

'குட்டக் குட்டக் குனிபவனும் முட்டாள். குனியக் குனியக் குட்டுபவனும் முட்டாள்' - என்ற பேச்சு மொழி நம்மத்தியில் உண்டு.

அப்படி இந்த நாட்டின் இரண்டு தேசிய இனத்தவர்களும் - தமிழர்களும் சிங்களவர்களும் - தொடர்ந்து நீடிக்கக் கூடாது.

தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு சம்பந்தப்பட்ட விடயத்தில், கடந்த 75 ஆண்டுகளுக்கு மேல் இப்படி இருதரப்புகளையும் முட்டாளாக்கும் நிலைமை தான் தொடர்ந்து நீடித்து வருகின்றது. அந்தப் போக்கை சிங்கள தரப்புகள் - தலைவர்கள் - இனியும் தொடர முயலக் கூடாது. அந்தப் போக்குக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும்.

தீர்வு என்ற பெயரில் சிறுபான்மையின ரான தமிழர்களுக்கு வாக்குறுதி அளிப்பதும், பின்னர் தங்கள் காரியம் முடிந்ததும் தமிழர்களை கைவிட்டு ஏமாற்றுவது மாகவே இனப்பிரச்சினை விவகாரத்தைக் கையாண்டு வருகின்றனர் சிங்கள தலைவர்கள்.

தெளிவாகவோ, திட்டவட்டமாகவோ அல்லாமல், பொத்தம் பொதுவில் வாக்குறுதி அளிப்பது, பின்னர் கொடுத்த வாக்குறுதியைக் காற்றில் பறக்க விட்டு ஏமாற்றுவதற்கு சுலபமான மார்க்கம்தான்.

அந்த முறைமையைத்தான், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாஸாவும் கையில் எடுத்திருக்கின்றாரோ என்ற சந்தேகம் இப்போது ஏற்பட்டுள்ளது.

"நான் ஜனாதிபதியாகத் தெரிவானால் இலங்கையின் இறையாண்மையைப் பாதிக்காத வகையில் தமிழ் மக்கள் விரும்பும் தீர்வை வழங்கத் தயாராக இருக்கின்றேன்" - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இப்போது தெரிவித்திருக்கின்றமையை நோக்கும் போதுதான் இந்தச் சந்தேகம் வருகின்றது.

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எனக்கு வெற்றி வாய்ப்பு அதிகம். சிங்கள மக்கள் மாத்திரமின்றி பெரும்பாலான தமிழ், முஸ்லிம் மக்களும் எனக்கான ஆணையை வழங்குவார்கள். நான் ஜனாதிபதியாகப் பதவியேற்றவுடன் தற்போதைய நாடாளுமன்றத்தைக் கலைத்து விடுவேன். தேர்தல் மூலம் புதிய நாடாளுமன்றம் அமையும். ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியே ஆட்சியமைக்கும். புதிய அரசமைப்பைக் கொண்டு வந்து இலங்கையின் இறையாண்மையைப் பாதிக்காத வகையில் தமிழ் மக்கள் விரும்பும் தீர்வை வழங்க நான் தயாராக இருக்கின்றேன். இதற்குப் புதிய நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஆளும் - எதிரணி உறுப்பினர்கள் ஆதரவு வழங்குவார்கள் என நம்புகின்றேன்.

"எமது அரசில் இனவாதம், மதவாதம் என்ற ரீதியில் பிரச்சினைகள் மீண்டும் ஏற்பட இடமளிக்கமாட்டேன்.

கடந்த காலங்களில் இனவாதத்தாலும் மதவாதத்தாலும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். அந்த நிலைமை இனியும் வேண்டாம். அனைவரும் ஒரே நாட்டு மக்கள். ஒரு தாய் வயிற்றுப்பிள்ளைகள்" - என்றெல்லாம் கூறியிருக்கின்றார் சஜித் பிரேமதாஸ.

தேர்தல்கள் வரும் சமயங்களில் இப்படி பொத்தம் பொதுவில் வாக்குறுதி அளிப்பதும், காரியமாகி, தேர்தல் முடிந்து, தாங்கள் வென்ற பின்னர் இத்தகைய பொது அறிவிப்பு திட்டங்களுக்கு அவர்கள் கொடுக்கும் வியாக்கியானமும் தமிழர் அறிந்தவைதான்.

தமிழர்கள் தாம் விரும்பும் தீர்வு எது என்பதை 1977 முதலிலேயே தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தி வருகின்றனர்.

ஒன்றுபட்ட இலங்கைக்குள், பிரிக்கப்படாத, பிளவுபடாத நாட்டுக்குள், சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வுடனான தீர்வு ஒன்றையே இலங்கைத் தமிழர்கள் விரும்புகின்றார்கள்.

இரும்புச் சட்டகம் போல கொஞ்சமும் - கொஞ்சம் தன்னும் - இளக்கம் இல்லாமல், விட்டுக் கொடுக்கவே முடியாத, சற்றும் தளர்வுப் போக்கற்ற இலங்கையின் அரசமைப்பின் கீழ் - ஒற்றை ஆட்சி முறைமையின் கீழ் - தேசிய இனப்பிரச்சினைக்கு நீதி, நியாயமான, நின்று, நிலைத்து, நீடிக்கக்கூடிய தீர்வு ஒன்றைக் காண்பது சாத்தியமே அற்றது என்பது தான் தமிழர்களின் நிலைப்பாடு பட்டறிவு அனுபவம்.

ஒற்றை ஆட்சி முறைமைக்கு வெளியில் வந்து தமிழர்கள் விரும்பும் தீர்வை எந்த மட்டம் வரை வழங்கத் தான் தயார் என்பதை சஜித் பிரேமதாஸ தெளிவான வார்த்தைகளில் விளக்கமாக வெளிப்படுத்த வேண்டும் தெளிவுபடுத்த வேண்டும்.

அதை விடுத்து இத்தகைய பொத்தம் பொதுவான அறிவிப்பு என்ற பருப்பு தமிழர்களிடம் அவியவே அவி யாது...!



# யாழ். மாவட்ட செயலக ஏற்பாட்டில் புகைத்தல், போதை விழிப்புணர்வு

'நண்பா போதைக்கும் புகைத்தலுக்கும் முற்றுப்புள்ளி வைப்போம் வலுவான தேசம் ஒன்றிணை நிதமும் கட்டியெழுப்புவோம்' என்னும் தொனிப் பொருளில் சர்வதேச புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு தின மாவட்ட மட்ட பிரச்சார வீதி ஓட்ட நிகழ்வும், கொடி தின ஆரம்ப நிகழ்வும் யாழ். மாவட்ட செயலகத்தில் மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எவ்.சி. சத்தியசோதி தலைமையில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டப் பதில் அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபனும், சிறப்பு விருந்தினர்களாக விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மருத்துவப் பிரிவு வைத்



திய கலாநிதி எஸ். கஜேந்திரனும், நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி உ. யசோதா , யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் சா. சுதர்சன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு இணைப்பாளர் எந்திரி ரி. சாந்தாதேவி, மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் க. விஜிதரன், மாவட்ட சமுர்த்தி கணக்காளர் இ. முருகதாஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பிரதேச செயலக சமுர்த்தி முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

வீதி ஓட்டப் போட்டியில் 15 பிரதேச செயலகங்களின் 33 வங்கிகளை பிரதிநிதித்துவப்படுத்தி 33 வீரர்கள் பங்குபற்றினர். முதல் இடத்தை சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் பெற்றுக் கொண்டது. முதல் 5இடங்களைப்பெற்ற வீரர்களுக்கு பணப் பரிசில்களும், பங்குபற்றிய அனைத்து வீரர்களுக்கும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

# சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு புதிய வைத்திய அத்தியட்சகர் நியமனம்

(றியாஸ் ஆதம்)

சுகாதார அமைச்சால் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக நியமிக்கப்பட்ட டாக்டர் டீ.பிரபாசங்கர் இன்று (06) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் அறிக்கை செய்து தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அம்பாறை மாவட்டம் காரைதீவு பிரதேசத்தைச் சேர்ந்த டாக்டர் பிரபாசங்கர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை, கல்முனை ஆதார வைத்தியசாலை ஆகியவற்றில் பணியாற்றியுள்ளார்.



ஆரையம்பதி சுகாதார வைத்திய அதிகாரியாகவும் காத்தான்குடி கொரோனா வைத்தியசாலை பொறுப்பதிகாரியாகவும் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.





# கம்பஹாவை எதிர்காலத்தில் வெள்ளத்திலிருந்து பாதுகாக்க அரச நிறுவனங்கள் உள்ளடக்கிய குழு!

## மும்முனைத் திட்டத்தைச் செயல்படுத்த முடிவு

எதிர்காலத்தில் கம்பஹா மாவட்டத்தை வெள்ளத்தில் மூழ்கடிப்பதைத் தடுப்பதற்காக அனைத்து அரச நிறுவனங்களையும் உள்ளடக்கிய கூட்டு வழி நடத்தல் குழுவொன்று நியமிக்கப்படும்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் அறிவுறுத்தலின் பிரகாரம், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ. எஸ் சத்தியானந்த மற்றும் கம்பஹா மாவட்ட செயலாளர் லலிந்த கமகே ஆகியோர் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டமும் கம்பஹா நகரமும் எதிர்காலத்தில் வெள்ளத்தில் மூழ்காமல் இருக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பது குறித்து நேற்று (05) கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இது கம்பஹா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பொது முகாமையாளர் (ஆராய்ச்சி மற்றும் திட்டமிடல்) பொறியியலாளர் கே.எச். கீர்த்திரத்ன இங்கு மூன்று அம்ச நிகழ்ச்சிகளை வழங்கினார்.

இந்த மும்முனை திட்டத்தை செயல்படுத்தும் பொறுப்பை நியமிக்கப்பட்ட கூட்டு வழிநடத்தல் குழுவிடம் வழங்க முடிவு செய்யப்பட்டது. இந்தக் குழுவில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, நகர அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், நீர்ப்பாசனத் திணைக்களம், நெடுஞ்சாலைகள் அமைச்சு, விவசாய சேவைகள் திணைக்களம் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் இதில் அடங்கியுள்ளன. இந்தத் திட்டம் குறுகிய கால, மத்திய கால மற்றும் நீண்ட கால அடிப்படையில் செயல்படுத்தப்படும்.

மத்திய மற்றும் நீண்ட கால வேலைத் திட்டங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பொது முகாமையாளர் கீர்த்திரத்ன கூறினார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு வேலைத் திட்டத்தை துரிதப்படுத்துமாறு பணிப்புரை விடுத்தார்.

குறுகிய கால திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்ட 71 இடங்கள் சுத்தம் செய்யப்பட்டன.

ஜாரு கால்வாய், களுகொடுவ கால்வாய், குண்ய கால்வாய் ஆகிய மூன்று கால்வாய்களும் புனரமைக்கப்பட்டன. நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மேற்பார்வையில் இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் இந்தப் புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டது என்று இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹிரான் பாலசூரிய தெரிவித்தார். அதற்காக செலவிடப்பட்ட தொகை 37 லட்சம் ரூபாவாகும்.

கம்பஹா பிரதேச செயலர் பிரிவில் அடையாளம் காணக் கூடிய பிரதான அனர்த்தம் வெள்ளம் ஆகும். அத்தனகலு ஓயா நிரம்பி வழிவதால் அத்தனகலு ஓயாவை சுற்றியுள்ள தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியமையே இதற்கு முக்கிய காரணமாகும்.

அண்மைய மழையால் கம்பஹா நகரம் பாதிக்கப்பட்டுள்ளதோடு வெள்ளத்தால் 19,860 குடும்பங்களைச் சேர்ந்த 80,411 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 527 குடும்பங்களைச் சேர்ந்த 21,478 பேர் 5 பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்று மாவட்ட செயலாளர் குறிப்பிட்டார். அனர்த்த முகாமைத்துவ பிரிவு மற்றும் முப்படை இராணுவம் பொலிஸ், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் அரச நிறுவனங்கள் என்பன அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக செயற்பட்டு வருகின்றனர்.

கம்பஹா நகரின் வைத்தியசாலை, பாடசாலைகள் மற்றும் ஏனைய கால்வாய்களில் உள்ள பிரதான பக்க வடிகால்கள் மற்றும் ஏனைய கால்வாய்களை இனங்கண்டு அவற்றிலிருந்து நீர் வெளியேறும் வகையில் விரிவுபடுத்தி அபிவிருத்தி செய்வதற்கான திட்டத்தை தயாரிக்குமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் கூறினார்.

கம்பஹா மாவட்டத்தில் எத்தனை மில்லி மீற்றர் மழை பொழியும் என ஆராய்ந்து அதற்கு தீர்வு காண கம்பஹா மாவட்டத்துக்குத் தனியான திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமென கம்பஹா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் சஹன் பிரதீப் இங்கு கருத்துத் தெரிவித்தார்.

கம்பஹா மாவட்ட அனர்த்த முகாமைத்துவக் குழு, கம்பஹா மாவட்டத்தை வெள்ளத்தில் மூழ்க விடாமல் வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவதற்கு அனைத்து அரச நிறுவனங்களுடனும் இணைந்து கடந்த காலங்களில் பாரிய பணிகளை மேற்கொண்டதாகவும், இம்முறை நாடு முழுவதும் பெய்த கடும் மழையே வெள்ள நிலைமைக்குக் காரணம் எனவும் அவர் தெரிவித்தார்.

கம்பஹா நகரின் வடிகால் அமைப்பு மற்றும் கால்வாய் அமைப்பை அடைத்து பல சட்டவிரோதமான கட்டுமானங்கள் கட்டப்பட்டுள்ளன என்று கம்பஹா மாநகர ஆணையாளர் இங்கு குறிப்பிட்டார். வடிகால் அமைப்பில் அடைப்பு ஏற்பட்டுள்ளதாலும், நீர் விரைவாக வெளியேறாமையால் கம்பஹாவில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கு முக்கிய காரணம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வாய்ப்பை பயன்படுத்தி வடிகால் அமைப்பை சீரமைக்கவும், அவற்றில் கட்டப்பட்டுள்ள சட்டவிரோத கட்டடங்களை அகற்றவும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் மாநகர ஆணையாளரிடம் கேட்டுக்கொண்டார்.

இதற்கு அரச நிறுவனங்களின் அதிகபட்ச ஆதரவை வழங்க வேண்டுமென அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் அரசியல் அமைப்புகளின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.



# டயகம வெஸ்ட் தோட்டத்தில் மூங்கில் மரக்கன்றுகள் நடல்

(ஆ.ரமேஸ்)

ஐக்கிய நாடுகள் அவையின் பொது சபையால் 1972 ஆம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட சுற்றுச்சூழல் தினம் ஒவ்வொரு வருடமும் ஜூன் ஐந்தாம் திகதி உலகளாவிய ரீதியில் கொண்டாடப்பட்டு வருகிறது.

அந்த வகையில் இலங்கையில் மலையக பிரதேசமான அக்கரப்பத்தனை பெருந்தோட்ட நிர்வாகத்தின் கீழ் இயங்கும் டயகம வெஸ்ட் தோட்டத்தில் நேற்று (05) தோட்ட நிர்வாகத்தின் ஏற்பாட்டில் சுற்றுச் சூழல் தினம் கொண்டாடப்பட்டது.

“பசுமையான சூழலை உருவாக்கி பிள்ளைகளுக்கு கையளிப்போம்”, மக்களுக்கு சுத்தமான குடி தண்ணீரை வழங்குவோம்” எனும் தொனியில் கொண்டாடப்பட்ட இந்த நிகழ்வில் 500 மூங்கில் மரக்கன்றுகள் நடப்பட்டன.

இந்த நிகழ்வில் அக்கரப்பத்தனை பெருந்தோட்ட பிராந்திய முகாமையாளர் ரொகான் வீரகோன், தோட்ட முகாமையாளர் வர்ணரனதுங்க மற்றும் வன பகுதி அதிகாரி பி நந்தகுமார் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

டயகம தமிழ் மகா வித்யாலய பாடசாலை மாணவர்கள், அதிபர்கள் உள்ளிட்ட பலரும் நிகழ்வு கலந்து கொண்டு மூங்கில் கன்றுகளை நட்டு வைத்தனர்.









# உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு கல்முனை பொலிஸாரால் மரம் நடுகை

**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு கல்முனை பொலிஸ் நிலையம் ஒழுங்கு செய்திருந்த சூழல் பாதுகாப்புக்கான மரநடுகை வேலைத் திட்டம் இன்று (06) கல்முனை மாநகர சபையில் நடைபெற்றது.

மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மியின் ஆலோசனைக்கு அமைவாக பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌஸியின் நெறிப்படுத்தலில் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்முனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரம்ஸீன் பக்கீர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

அத்துடன் கல்முனை பொலிஸ் நிலையத்தின் சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஏ.எல்.ஏ. வாஹித், சுற்றுச்சூழல் பாதுகாப்பு பிரிவு பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் எம்.ஐ. றபீக், கல்முனை மாநகர சபையின் உள்ளூராட்சி உத்தியோகத்தர் தாரிக் அலி சர்ஜூன், வேலைகள் அத்தியட்சகர் பி.ரி.எம். நஹீம் உட்பட தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது மாநகர சபை வளாகத்தில் பயன்தரும் மரக்கன்றுகள் பல நடப்பட்டன.

இதேபோல் கல்முனை பிரதேச செயலகத்திலும் கல்முனை பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் மரக்கன்றுகள் நடப்பட்டன என்று பிரதான பொலிஸ் பரிசோதகர் ஏ.எல்.ஏ. வாஹித் தெரிவித்தார்.



# வழுக்கையாறு - புங்குடுதீவு - குறிக்கட்டுவான் வீதியில் இரவுப் போக்குவரத்துகளுக்குத் தடை!

(த.சுபேசன்)

வழுக்கையாறு – புங்குடுதீவு – குறிக்கட்டுவான் வீதி அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்ப தால் வீதி அபிவிருத்தி அதிகார சபை யினர் வாகன சாரதிகளுக்கான அறி வித்தல் ஒன்றை விடுத்துள்ளனர்.

இந்த அறிவித்தல் கடிதத்தில், வழுக்கையாறு – புங்குடுதீவு – குறிக் கட்டுவான் வீதியின் சில பகுதிகள் காப்பெற் இடும் பணிகள் நேற்று (05) ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த வீதிகளுக்குக் காப்பெற் இடும்போது இரண்டு வாகனங்கள் விலத்துவது கடினமானதாகும். எனவே




வீதி அபிவிருத்திப் பணிகளை பகல், இரவு எனப் பிரித்து மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்திப் பணிக்கு ஒத் துழைப்பு வழங்கும் பொருட்டு வாக னச் சாரதிகள் மாலை 6 மணியில் இருந்து காலை 6 மணிவரை இந்தப் பகுதி ஊடாகப் போக்குவரத்து வரத்தைத் தவிர்த்து உதவுமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.



# ஐ. தே.கட்சியின் புதிய அமைப்பாளர் கல்முனைத் தொகுதிக்கு நியமனம்

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்ட கல்முனை தொகுதி வலய ஐக்கிய தேசியக் கட்சி யின் அமைப்பாளராக, கல்முனை மாநகர சபையின் – கட்சியின் முன்னாள் உறுப்பினர் பேரிம்பராசா மனோரஞ்சினி நியமிக்கப்பட்டுள் ளார்.

இதன்படி பாண்டிருப்பு 6 ஆம் வட்டாரம் பாண்டிருப்பு 10 ஆம் வட்டா ரம் நீலாவணை முதலாம் வட்டாரம் கல்முனை 11 ஆம் வட்டாரம் ஆகிய 4 வலயங்களுக்கான அமைப்பாளராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலை மையகமான ஸ்ரீ கொத்தாவில் வைத்து நியமனம் கடந்த ஞாயிற் றுக்கிழமை (02) வழங்கப்பட்டுள் ளது.

இதன் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார நியமனக் கடிதத்தை வழங்கி னார்.







# வளி மாசடைதல் தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வு!

(மஸ்கெலியா)

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு வாகன உரிமையாளர்கள் மற்றும் பொது மக்களுக்கு வளி மாசுபாட்டையும் அதன் விளைவுகளையும் குறைக்கும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி அண்மையில் நானுஓயா நகரில் இடம்பெற்றது.



நுவரெலியா உள்ளூராட்சி மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வாகன உரிமையாளர்கள் மற்றும் பொது மக்களுக்குக் காற்று மாசுபாடு மற்றும் அதன் விளைவுகளை குறைத்தல் தொடர்பான விழிப்புணர்வுத் துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பதற்கு உள்ளூராட்சி மன்ற அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர்.

உள்ளூராட்சி மன்ற அதிகாரிகள் வளி மாசு அடைவதால் உண்டாகும் தீமைகள் தொடர்பில் இதன் போது மக்களுக்கு விளக்கினர்.



# ஆயிரத்து 700 ரூபா வெற்றிக்கு பூண்டுலோயாவில் கொண்டாட்டம்

(ஆ.ரமேஸ்)

பெருந்தோட்ட தொழிலாளர்களின் 1700 ரூபா சம்பள உயர்வு தொடர்பில் தொழில் அமைச்சு ஊடாக வெளியிடப்பட்ட வர்த்தமானிக்கு கொழும்பு மேல்முறையீட்டு நீதிமன்றம் நீதி வழங்கியுள்ளது.

தோட்ட தொழிலாளர்களுக்கு சாதகமான வழங்கப்பட்டுள்ள நீதிக்கு பூண்டுலோயா பிரதேச தோட்டங்களில் தோட்டத் தொழிலாளர்கள் வெற்றி களிப்பில் ஈடுபட்டனர்.



இதன் போது பூண்டுலோயா பேர்லண்ஸ் தோட்ட நான்கு பிரிவுகளை சேர்ந்த தொழிலாளர்களும், சீன் தோட்ட தொழிலாளர்களும் தங்களது தோட்ட ஆலயங்களில் ஒன்று கூடி பூசை வழிப்பாட்டில் ஈடுபட்டனர்.

இந்த நிகழ்வுகளில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மாவட்ட பிரதிநிதி கே.ரமேஷ்குமார் உள்ளிட்ட பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.



# நானாட்டான் பிரதேச செயலக விளையாட்டு விழா



(அஸ்ஹர் இப்றாஹிம்)

நானாட்டான் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையிலான தட, கள மற்றும் குழு விளையாட்டுகளின் இறுதி நாள் நிகழ்வுகளும் பரிசளிப்பும் அண்மையில் பிரதேச செயலாளர் கனகாம்பிகை சிவசம்பு தலைமையில் நானாட்டான் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர், உதவி திட்டமிடல் பணிப்பாளர், நிர்வாக அலுவலர், மாவட்ட விளையாட்டு அதிகாரி, அபிவிருத்தி கூட்டிணைப்பாளர், வங்கி முகாமையாளர்கள், ஏனைய பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# விளையாட்டுக் கழகத்துக்கு மின் விளக்குகள் கையளிப்பு

(எம்.எம்.றம்ஸீன்)

புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் சொந்த நிதியிலிருந்து சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான 4 மின்விளக்குகளை கரம்பை அல் இன்ஸ்ரா விளையாட்டு கழகத்துக்கு காரியாலயத்தில் வைத்து கையளித்துள்ளார்.

கரம்பை ரிஸ்வான் முஸ்லிம் வித்தியாலயத்துக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கும் வைபவத்தின் போது அங்கு வந்திருந்த இளைஞர்கள் சிலர் தாங்கள் விளையாடும் கரப்பந்தாட்ட மைதானத்தை நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமை அழைத்துச் சென்று காண்பித்ததுடன் இரவு நேரங்களில் விளையாடுவதற்கும், போட்டிகளை நடத்துவதற்கும் மின்விளக்குகளை பெற்றுத் தருமாறு வேண்டுகோள் விடுத்தனர்.



அதற்கான மின் விளக்குகளை பெற்றுத் தருவார் என்று உறுதியளித்த நாடாளுமன்ற உறுப்பினர், அவரது இணைப்புச் செயலாளர் அமீர் அலியிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைத்து அதற்கான மின் விளக்குகளை வழங்கி வைத்தார்.



# அனர்த்த ஆபத்து நிலைமைகளை முகாமை செய்வதற்கு வழிகாட்டல்

(எம்.எம்.ஜெஸ்மின்)

அனர்த்த ஆபத்து நிலைமைகளை முகாமை செய்வதற்கான பாடசாலைகளின் பாதுகாப்பு தொடர்பிலான வழிகாட்டல் செயலமர்வு கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் அக்கரைப்பற்று வலயக்கல்வி அலுவலகத்தில் நடத்தப்பட்டது.

இந்தச் செயலமர்வில் பிரதான வளவாளராக மாகாண பிரதிக் கல்வி பணிப்பாளர் சஹீல் கலந்து கொண்டார்.



வலயக்கல்வி அலுவலகத்தின் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் எம்.எச்.ஹம்மாத் இதனை ஒழுங்கு செய்திருந்தார்.

அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் உள்ள மூன்று கோட்டப் பாடசாலைகளிலும் இருந்து 50 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இதில் கலந்து கொண்டனர்.







# மரக் கூட்டுத்தாபன ஏற்பாட்டில் குருநகரில் மரநடுகைத் திட்டம்

(த.சுபேசன்)

அரச மரக் கூட்டுத்தாபனத்தின் ஏற்பாட்டில் சூழல் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு நேற்று (05) வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் தேசிய தேசிய மரநடுகைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அரச மரக்கூட்டுத்தாபனத்தின் வட பிராந்திய முகாமையாளர் தலைமையில் யாழ்ப்பாணத்தின் குருநகர் பகுதியில் மரநடுகைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குருநகர் திருச்சிலுவை முன்பள்ளி சிறார்களுக்கு மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்படடன.

# கூட்டணிக்கு ஆதரவுதான் ஆனால் நிபந்தனைகள் உண்டு ஆட்சியமைக்கும் முன்னரே பா.ஜ.கவுக்குப் பல சவால்கள்!



**புதுடெல்லி, ஜூன் 06**

பாரதீய ஜனதாக் கட்சியுடன் சேர்ந்து ஆட்சிக்கு முழு ஒத்துழைப்புத் தரத் தயார். ஆனால் மத்திய அமைச்சரவையில் முக்கிய இடம் தர வேண்டும் என்று பாரதீய ஜனதாக் கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளான ஐக்கிய ஜனதாதளம், தெலுங்கு தேசம் மற்றும் மதசார்பற்ற ஜனதா தளம் ஆகிய கட்சிகள் நிபந்தனை விதித்துள்ளன எனத் தெரிகின்றது.

நடந்து முடிந்த இந்தியத் தேர்தலில், பா.ஜ.க. 240 தொகுதிகளில் வெற்றி பெற்றது. இதனால், ஆட்சியமைக்க தேவையான 272 என்ற எண்ணிக்கையை விட 32 தொகுதிகள் குறைவாக உள்ளது. எனினும், தேசிய ஜனநாயகக் கூட்டணி 292 தொகுதிகளை கைப்பற்றி உள்ளது.

இதனைத் தொடர்ந்து மத்தியில் ஆட்சியமைக்கும் பணியில் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி இறங்கியுள்ளது.

பெரும்பான்மையை பெற பா.ஜ.க. தவறிய நிலையில், ஐக்கிய ஜனதா தளத் தலைவர் நிதீஷ் குமார் மற்றும் தெலுங்கு தேச கட்சியின் தலைவர் சந்திரபாபு நாயுடு ஆகிய இருவரும் மத்தியில் ஆட்சியமைப்பதில் முக்கிய பங்கு வகிப்பவர்களாக இருப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், தேசிய ஜனநாயக கூட்டணிக்கு நிதீஷ் குமார் மற்றும் சந்திரபாபு நாயுடு ஆகிய இருவர் தலைமையிலான கட்சிகளின் ஆதரவு தேவையாக உள்ளது. அவர்கள், கூட்டணிக்கு தங்களுடைய முழு ஆதரவைத் தெரிவித்து உள்ளனர்.

எனினும், மத்தியில் பா.ஜ.க. ஆட்சியமைக்க கூட்டணி கட்சிகள் ஆதரவு தெரிவித்தபோதும், சில நிபந்தனைகளை விதித்துள்ளன. இதன்படி, போக்குவரத்து, தகவல் தொழில்நுட்பம், வேளாண்மை, ஊரக வளர்ச்சி, சுகாதாரம் மற்றும் நீர்வள துறை போன்றவற்றை தரும்படி சந்திரபாபு நாயுடு கேட்டுள்ளார் எனக் கூறப்படுகிறது.

இதேபோன்று, பீகார் முதல்-மந்திரி மற்றும் ஐக்கிய ஜனதாதள கட்சியின் தலைவரான நிதீஷ் குமார், பீகாருக்கு சிறப்பு அந்தஸ்து, குறைந்தபட்ச பொது செயல் திட்டம் வகுக்க வேண்டும் என நிபந்தனை விதித்துள்ளார். 3 அமைச்சரவை அந்தஸ்து மற்றும் 2 இணை மந்திரிகள் என 5 மத்திய மந்திரி பதவிகள் வேண்டும் என்றும் நிதீஷ் விரும்புகிறார்.

இதேபோன்று, 2 எம்.பி.க்களை வைத்துள்ள மதசார்பற்ற ஜனதா தளமும் மந்திரி சபையில் இடம் கேட்டு பா.ஜ.க.வை வலியுறுத்தி வருகிறது. அக்கட்சி வேளாண் துறை வேண்டும் எனக் கேட்டுள்ளது.

கூட்டணிக்கு ஆதரவை வெளிப்படுத்திய, முன்னாள் மத்திய மந்திரி ராம் விலாஸ் பஸ்வானின் மகனான, சிராக் பஸ்வான் தலைமையிலான லோக் ஜனசக்தியும் நிபந்தனை விதித்துள்ளது என கூறப்படுகிறது. அக்கட்சி, பீகாரில் 5 தொகுதிகளைக் கைப்பற்றி உள்ளது.

இதனால், பா.ஜ.க. மத்தியில் ஆட்சியமைப்பதற்கு முன்பே, கூட்டணி கட்சிகளின் ஆதரவை பெறுவதற்காக இதுபோன்ற பல சவால்களை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளது.

# மோடியின் பதவியேற்பு நிகழ்வில் பங்குபற்ற பல நாடுகளின் தலைவர்களுக்கும் அழைப்பு



மூன்றாவது முறையாகத் தாம் பிரதமராகப் பதவியேற்கும் விழாவில் பங்கேற்குமாறு பூட்டான் மன்னர், இலங்கை அதிபர் உள்ளிட்ட பல்வேறு நாட்டு தலைவர்களுக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இன்று நடந்த தே.ஜ. கூட்டணி கூட்டத்தில் கூட்டணி கட்சி தலைவராக பிரதமர் நரேந்திர மோடி தேர்வு செய்யப்பட்டார். நாளை மறுதினம் 8 ஆம் திகதி அவர் மீண்டும் பிரதமராகப் பதவியேற்க உள்ளார்.

பதவியேற்பு விழாவில் பங்கேற்க வருமாறு பூட்டான் மன்னர், இலங்கை அதிபர் மற்றும் மொரீஷியஸ் , வங்கதேசம், நேபாளம் நாடுகளின் பிரதமர்கள் உள்ளிட்ட பல்வேறு நாட்டு தலைவர்களுக்கு மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, 3 ஆவது முறையாகப் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மோடிக்கு தொலைபேசி மூலம் வாழ்த்துத் தெரிவித்தார். அப்போது அவரைப் பதவியேற்பு விழாவிற்கு வருமாறு மோடி அழைப்பு விடுத்தார். அவரும் அதை ஏற்றுக்கொண்டார்.

அதேபோல, வங்கதேச பிரதமர் ஷேக் ஹசினாவுடன் தொலைபேசியில் உரையாடிய மோடி, பதவியேற்பு விழாவில் பங்கேற்குமாறு அழைப்பு விடுத்தார். அதை அவர் ஏற்றுக்கொண்டார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இதைத்தொடர்ந்து நேபாள பிரதமர் புஷ்ப கமல் தஹால் பிரசந்தாவுடன் தொலைபேசியில் உரையாடிய மோடி, முறையான அழைப்பிதழ்கள் அனுப்பப்படும் என்று கூறி அழைப்பு விடுத்தார்.

மேலும் பூடான் பிரதமர், மொரீஷியஸ் அதிபருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ம்

இந்தியாவின் பிரதமராக மோடி மீண்டும் பதவி ஏற்பதன் மூலம், கடந்த 1962 ஆம் ஆண்டுக்கு பிறகு முதல் முறையாக ஆளும் அரசு 3ஆவது முறையாக ஆட்சிக்கு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.



# பிரேக் பிடிக்காதமையால் முன்னால் சென்ற வாகனங்களை இடித்து தள்ளிய லொறி; 13 பேரை பலி கொண்ட விபத்து!

**எம்பெயா, ஜுன் 06**

தான்சானியா நாட்டில் லொறி ஒன்று திடீரேன பிரேக் பிடிக்காமல் போன சிக்கலால் ஏற்பட்ட தொடர் விபத்தில் 13 பேர் உயிரிழந்தனர்.

தான்சானியா நாட்டின் எம்பெயா பிராந்தியத்தின் எம்பெம்பேலா பகுதியில் சென்றுகொண்டிருந்த ஒரு லொறியின் பிரேக் திடீரென பழுதானதால் பெரும் விபத்து ஏற்பட்டது. சிமிக் சரிவுப்பாதையில் டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து தாறுமாறாக சென்ற லொறி, முன்னால் சென்ற மூன்று கார்கள், ஓர் ஆட்டோ மற்றும் பல மோட்டார் சைக்கிள்களை இடித்து தள்ளியது.

நேற்று நிகழ்ந்த இந்த விபத்தில் 13 பேர் உயிரிழந்தனர். 18 பேர் பலத்த காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் அப்பகுதியில் உள்ள எம்பெயா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 8 பேர் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பிரேக் பிடிக்காத லொறியால் ஏற்பட்ட தொடர் விபத்தில் 13 பேர் உயிரிழந்ததை காவல்துறை கமாண்டர் உறுதி செய்துள்ளார். லொறி டிரைவர் கைது செய்யப்பட்டு விசாரணை நடத்தப்படுகிறது.

# பாகிஸ்தானில் காஸ் சிலிண்டர் வெடிவிபத்தில் பலியானோர் எண்ணிக்கை 18 ஆக உயர்ந்தது

**ஐதராபாத், ஜுன் 06**

பாகிஸ்தானில் பரீதாபாத் நகரில் கடந்த சில நாள்களுக்கு முன் காஸ் சிலிண்டர் வெடித்து ஏற்பட்ட விபத்தில் குழந்தைகள், பெண்கள் என பலர் சிக்கி கொண்டனர். இந்த விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 18 ஆக உயர்ந்துள்ளது.



இவர்களில் ஜீஷன் என்பவரின் மகள் அலிஷா (வயது 17), அர்ஷத் என்பவரின் மகன் உமைர் (வயது 15), முபாரக் என்பவரின் மகன் அப்பாஸ் அலி (வயது 14) மற்றும் மெஹர் பாக்ரி என்பவரின் மகன் தோடா (வயது 25) ஆகிய 4 பேர் சமீபத்தில் உயிரிழந்தனர். இதனால், பலி எண்ணிக்கை 18 ஆக உயர்ந்துள்ளது.

ஜீஷனின் மகன் முகமது ஹசன் என்ற அலி ஹைதர் இந்த வெடி விபத்தில் சமீபத்தில் உயிரிழந்த நிலையில், மகளும் உயிரிழந்து விட்டார். 5 வயது மகள் கின்ஜா சிகிச்சை பெற்று வருகிறார்.

முறையான அனுமதி இன்றி காஸ் சிலிண்டர் விற்பனை கடைகள் செயல்பட்டு வருகின்றன என அரசு நிர்வாகம் கூறி வருகிறது.

சட்டவிரோத, காஸ் மற்றும் சி.என்.ஜி. நிரப்பு நிலையங்களுக்கு எதிராக, கடுமையான நடவடிக்கை எடுக்கும்படி துறை நிறுவன உயரதிகாரிகளுக்கு பொலிஸ் துணை ஆணையாளர் ஜெய்ன் உல் அபிதின் மேமன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சட்டவிரோத விற்பனைக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி உள்துறை செயலாளருக்கும் அவர் கடிதம் எழுதி உள்ளார்.

இதேபோன்று, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு போதிய உபகரணங்கள், முறையான ஐ.சி.யு. வார்டுகள் உள்ளிட்டவை இல்லை என்றும் குற்றச்சாட்டு கூறப்படுகிறது. 20 ஆண்டுகளாக தீக்காயத்திற்கு சிகிச்சை அளிக்க போதிய கட்டட வசதிகள் இல்லை என டாக்டர் தஹீர் கூறியுள்ளார்.

பக்கங்கள் 06

கனடா முரசு

வியாழக்கிழமை 06/06/2024

## கொவிட் தொற்றுத் தரவுகள் வழங்கும் நடைமுறை பூர்த்தி

ஒன்ராரியோ, ஜூன் 06

கொவிட்-19 தொற்றுநோய்களின் போது மாகாணத்தில் தொற்று விகிதங்கள் பற்றிய முக்கியமான தரவுகளை விஞ்ஞானிகளுக்கு வழங்கி வந்த ஒன்ரா C2



# கனடிய மத்திய வங்கி நேற்று வட்டி வீதத்தைக் குறைத்தது

## நான்கு ஆண்டுகளில் முதல் முறையாக

ஒன்ராரியோ, ஜூன்06

நான்கு ஆண்டுகளில் முதல் முறையாக கனடிய மத்திய வங்கி முக்கிய வட்டி விகிதத்தை குறைத்துள்ளது.

மார்ச் 2022-இல் பணவீக்கத்தை எதிர்த்து வட்டி விகிதம் 5 சதவீதமாக உயர்த்தப்பட்டது.

அதன்பிறகு முதல்முறையாக நேற்றுப் புதன்கிழமை (மே 5) வட்டி விகிதங்கள் குறைக் கப்பட்டுள்ளன.

இந்த அறிவிப்பு வட்டி விகிதத்தை 4.75 சதவீதமாக்கிறது. C2

# ஜனசங்காரம் கல்விக் குழுவிற்கு சிறப்பு அங்கீகாரம் வழங்க மறுப்பு

## பிரிட்டிஷ் கொலம்பியா ஆசிரியர் கூட்டமைப்பு முடிவாம்

பிரிட்டிஷ் கொலம்பியா, ஜூன் 06

ஹோலோகாஸ்ட் (ஜனசங்காரம்) கல்விக் குழுவிற்கான சிறப்பு அங்கீகாரத்தை பிரிட்டிஷ் கொலம்பியா ஆசிரியர் கூட்டமைப்பு மறுத்துள்ளதாக யூத அமைப்புகள் தெரிவிக்கின்றன.

நாஜிகளால் யூதர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட ஜனசங்காரம் போன்ற இனப்படுகொலைகள் பற்றிய அறிவூட்டலில் ஹோலோகாஸ்ட் கல்வி மையங்கள் கவனம் செலுத்துகின்றன

இது, ஒரு கற்பித்தல் ஆதாரமாக தொழிற்சங்க நிதியைப் பெற தகுதியற்றதாக உள்ளது எனக் கூறி மறுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. C2



# ஒட்டாவா நாடாளுமன்ற வளாகத்தில் அல்கோன்குயின் மக்களுக்கு மையம்

## மத்திய - மாகாண அரசுகள் ஒப்பந்தம்

ஒன்ராரியோ, ஜூன் 6

பெடரல் அரசாங்கத் தலைவர்களும் மத்திய அரசாங்கமும், ஒட்டாவாவின் நாடாளுமன்ற வளாகத்தில் அல் கோன்குயின் மக்களுக்கான புதிய இடத்தை உறுதி செய்யும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

இதனைக் கோரிக்கையாக முன் வைத்து அல்கோன்குயின் மக்களின் சிரேஷ்ட தலைவர் ஒருவர் உண்ணா விரதம் இருந்து ஐந்து வருடங்களின் பின்னர் இந்த ஒப்பந்தம் கைச்சாத் திடப்பட்டுள்ளது.

அல்கோன்குயின் பழங்குடி சபையின் பெரிய தலைவராக முன்பு பணியாற்றிய வெர்னா போல்சன், ஜூலை 2019 இல் ஒட்டாவாவில் உள்ள பழங்குடியின மக்கள் கட்டடத்தின் முன் முகாமிட்டு உண்ணாவிரதம் இருந்தார்.

புதிய கட்டிடம் வெலிங்டன் தெருவில், சென்டர் பிளாக்கிற்கு நேராக, தற்போதைய பழங்குடியின மக்கள் கட்டடத்திற்கு அருகில் ஒரு முக்கிய இடத்தில் அமையும் எனத் தெரிவிக் கப்படுகின்றது.






### கோவிட்...

றியோ கழிவு நீர் கண்காணிப்பு ஆணையம் அதனை நிறைவு செய்வதாக அறிவித்துள்ளது.

ஒரு மின்னஞ்சலில், சுற்றுச்சூழல், பாதுகாப்பு மற்றும் பூங்காக்கள் அமைச்சின் செய்தித் தொடர்பாளர், மத்திய அரசு கனடா முழுவதும் கழிவுநீர் கண்காணிப்பை மேற்கொண்டு, ஒன்ராறியோவில் உள்ள கூடுதல் தளங்களுக்கு அதன் மாதிரியை விரிவுபடுத்த நகர்வதால், 'நகலைத் தவிர்ப்பதற்காக' மாகாணம் இந்த நடவடிக்கையை மேற்கொள்வதாகக் கூறினார்.

'முன்னோக்கி நகரும், சுகாதார அமைச்சு கனடாவின் பொது சுகாதார நிறுவனத்துடன் இணைந்து தரவுப் பகிர்வு ஒப்பந்தத்தில் இணைந்து ஒன்ராறியோ குறிப்பிட்ட கழிவு நீர் தரவை மாகாணம் தொடர்ந்து ஆய்வு செய்ய முடியும் என்பதை உறுதிப்படுத்தும்' என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

### கனடிய...

கடந்த ஆண்டு ஜூலை மாதத்தில் இருந்து வட்டி விகிதம் 5 சதவீதமாக உள்ளது.

மத்திய வங்கி அதன் முக்கிய வட்டி விகிதத்தை 2022 மார்ச் மாதத்தில் அதிகரிக்க ஆரம்பித்தது.

எதிர்பார்த்ததை விட அதிகரித்த பணவீக்கத்தைத் தொடர்ந்து, இந்த அதிகரிப்பு அப்போது அறிவிக்கப்பட்டது.

ஆனால்,பணவீக்கம் கடந்த டிசம்பரில் 3.4 வீதமாக இருந்து ஏப்ரலில் 2.7 வீதமாகக் குறைந்ததால் Bank of Canada இந்த முடிவை இப்போது எடுத் துள்ளது.

இது கனடாவின் பணவியல் கொள்கையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் குறிக்கிறது. மேலும் இது வரவிருக்கும் மாதங்களில் கூடுதல் வெட்டுக்களுக்கான கதவைத் திறக்கும் என நம்பப்படுகிறது.

Bloomberg கருத்துக்கணிப்பில் சந்தைகள் மற்றும் பொருளாதார வல்லுனர்களால் பரவலாக எதிர்பார்க்கப்பட்டதைப் போல, கனடிய மத்திய வங்கி ஆளுநர் டிஃப் மெக்லெம் தலைமையிலான கொள்கை வகுப்பாளர்கள், புதன்கிழமை ஒரே இரவில் வட்டி விகிதத்தை 25 அடிப்படை புள்ளிகள் குறைத்து 4.75 வீதமாகக் குறைத்துள்ளனர்.

பணவீக்கம் 2 வீத இலக்கை நோக்கிச் செல்லும் என்பதில் அதிக நம்பிக்கை இருப்பதாக டிஃப் மெக்லெம் கூறியுள்ளார்.

இந்த முன்னேற்றம் தொடர்ந்தால், "வட்டி விகிதத்தில் மேலும் வெட்டுக்களை எதிர்பார்ப்பது நியாயமானது" என்றும் அவர் கூறினார்.

இந்த ஆண்டு மேலும் இரண்டு 25 அடிப்படைப் புள்ளி வெட்டுக்கள் மற்றும் 2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் மேலும் ஐந்து வெட்டுக்கள் இருக்கக்கூடும் என்று, S&P குளோபல் மார்க்கெட் இன்டலிஜென்ஸில் கனேடிய பொருளாதாரத்தின் இயக்குனர் ஆர்லீன் கிஷ் கூறியுள்ளார். அடுத்த வட்டிவிகித அறிவிப்பு ஜூலை 24.ஆம் திகதிக்கு திட்டமிடப் பட்டுள்ளது.

### ஜனசங்காரம்...

ஹோலோகாஸ்ட் மற்றும் யூத எதிர்ப்பு கல்வியாளர்கள் சங்கத்தை ஒரு சிறப்புக் குழுவாக அங்கீகரிக்க மாட்டோம் என்று தொழிற்சங்கம் கூறியதாக யூத கூட்டமைப்பு ஆஃப் கிரேட்டர் வான்கூவர் மற்றும் இஸ்ரேல் மற்றும் யூத விவகாரங்களுக்கான மையம் ஆகியவற்றின் கூட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஹோலோகாஸ்ட் (ஜனசங்காரம்) கல்வியை பாடத்திட்டத்தின் கட்டாயப் பகுதியாக மாற்ற பிரிட்டிஷ் கொலம்பியஅரசு முடிவு செய்ததைத் தொடர்ந்து இந்த தொழிற்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால் உயர்நிலைப் பள்ளியில் பட்டம் பெறும் மாணவர்கள் இரண்டாம் உலகப் போரில் நாஜி ஆட்சியால் ஆறு மில்லியன் யூதர்களைக் கொன்றது பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்பது தெளிவாகத் தெரிகிறது என ஊடகவியலாளர் சந்திப்பில் பிரிட்டிஷ் கொலம்பிய முதல்வர் தெரிவித்துள்ளார்.

சங்கத்தின் தலைவர் இயல் டேனியல், இந்த முடிவால் தாங்கள் அதிர்ச்சியடைந்தனர் எனவும், ஆசிரியர் கூட்டமைப்பு தனது முடிவை மாற்றிக்கொள்ளும் என்று நம்புகிறார்கள் எனவும் கூறியுள்ளார்.




# ரொறன்ரொவில் வீடுகள் விற்பனை 22 வீத வீழ்ச்சி

ரொறன்ரோவில் வீடு விற்பனையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

ரொறன்ரோ பெரும்பாக பகுதியில் இவ்வாறு வீடு விற்பனையில் குறிப்பிடத்தக்களவு சரிவு பதிவாகியுள்ளதாக ரொறன்ரோ பிராந்திய ரியல் எஸ்டேட் சபை தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது இந்த ஆண்டு மே மாதம் வீடு விற்பனை 21.7 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த மே மாதம் 7,013 வீடுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன எனவும், கடந்த ஆண்டு மே மாதம் 8,960 வீடுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறெனினும் ரொறன்ரோ பெரும்பாக பகுதியில் வீடுகளின் விலைகள் 2.5 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளன.

கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது வீடொன்றின் சராசரி விலை 11,65,691 டொலர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

# வெளிநாட்டு அரசுகளின் தலையீடு தொடர்பான சர்ச்சை சம்பந்தப்பட்டோரின் விவரங்களை வெளியிட வற்புறுத்து



ஒன்ராரியோ, ஜூன் 06

கனேடிய அரசியலில் தலையிட வெளிநாட்டு அரசுகளின் முயற்சிகளுக்கு சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் புத்திசாலித்தனமாக உதவினர் எனக் கண்டறிந்ததன் மூலம் குழு 'எதையும் சேர்க்க முடியாது' என்று தேசிய பாதுகாப்பு கண்காணிப்புக் குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் தேசிய பாதுகாப்பு மற்றும் புலனாய்வுக் குழு தனது சமீபத்திய அறிக்கையில் குற்றச்சாட்டுகளை கோடிட்டுக் காட்ட முடிந்தவரை சென்றுள்ளது என்று லிபரல் நாடாளுமன்ற உறுப்பினர் டேவிட் மெக்குயின்டி கூறியுள்ளார்.

தலையீட்டில் ஈடுபட்டுள்ள உறுப்பினர்கள் இன்னும் அரசியலில் தீவிரமாக இருக்கக் கூடும் என்ற கவலையைத் தூண்டியுள்ளது.

மேலும் கன்சர்வேடிவ் தலைவர் பியர் பொலியேவ் புதன்கிழமை லிபரல் அரசாங்கம் அவர்களின் பெயர்களை வெளியிட வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளார்.

புதன்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய மெக்குயின்ட், குழு உறுப்பினர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் தகவல் பாதுகாப்புச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவர்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.




# 389 பயணிகளுடன் பாரிஸு க்குப் புறப்பட்ட எயார் கனடா விமானம் வழியில் திரும்பியது

ஒன்ராரியோ, ஜூன் 06

ஏறக்குறைய 400 பயணிகளை ஏற்றிக்கொண்டு கடந்த புதன் இரவு பாரிஸுக்குப் புறப்பட்ட எயார் கனடா விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் ‘இயந்திரக் கோளாறு’ காரணமாக டொராண்டோ பியர்சன் சர்வதேச விமான நிலையத்திற்குத் திரும்ப வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இணைய ஊடகங்களுக்கு எயார் கனடா விமானம் AC872 சம்பந்தப்பட்ட சம்பவத்தை உறுதிப்படுத்தியுள்ளது.

‘விமானம் தரையிறங்கிய பிறகு, அது சாதாரண இயக்க செயல்முறைகளின்படி விமான நிலைய பதில் வாகனங்கள் மூலம் பரிசோதிக்கப்பட்டது. மேலும் அது தன்னியக்கத்தில் தரையில் நகர்ந்து நுழைவாயிலுக்குச் சென்றது’ என்று விமான நிறுவனம் கூறியுள்ளது.

‘எங்கள் பராமரிப்பு மற்றும் பொறியியல் வல்லுநர்களால் மேலும் மதிப்பீட்டிற்காக விமானம் சேவையில் இருந்து நீக்கப்படும்.’ என எயார் கனடா தெரிவித்துள்ளது.

இந்த போயிங் 777 விமானத்தில் 389 பயணிகள் இருந்தனர் என எயார் கனடா தெரிவித்துள்ளது. எனினும் மாற்று விமானம் மூலம் அன்றிரவே பயணிகள் பாரிஸுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.



# கனடாவில் பலஸ்தீனர்களுக்கான ஆதரவை குறைக்கச் செய்யும் முயற்சியில் இஸ்ரேல்?

கனடாவில் பலஸ்தீனியர்களுக்கான ஆதரவைக் குறைக்கும் நோக்கில் செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சியாளர்களால் கோடிகாட்டப்பட்டதாகக் கூறப்படும் அறிக்கை ஒன்றை வெளியிட்டமை தொடர்பில் இஸ்ரேலிய அரசாங்கம் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

நியூ யோர்க் டைம்ஸ் மற்றும் இஸ்ரே லிய பத்திரிகை ஒன்றில் இது தொடர்பாக வெளியான தகவலை இஸ்ரேல் நிராகரித்துள்ளது.

இஸ்லாமிய வெறுப்பு உள்ளடக்கத்துடன் வட அமெரிக்கர்களைக் குறி வைத்துள்ள இந்த சமூக ஊடக செல்வாக்கு பிரசாரத்தின் பின்னணியில் இஸ்ரேல் உள்ளது என்ற ஆய்வாளர்களின் கூற்றை இஸ்ரேல் மறுத்துள்ளது.

கனடாவுக்கான யுனைடெட் சிட்டிசன்ஸ் என்ற பெயரைக் கொண்ட கணக்குகள், கனேடிய முஸ்லிம்களை மேற்கத்திய விழுமியங்களை அச்சுறுத்துவதாக சித்திரிக்கும் உள்ளடக்கத்தை வெளியிட்டன.

மேலும் கனடாவில் பலஸ்தீனிய ஆதரவு எதிர்ப்பாளர்கள் ஷரியா சட்டத்தை அமல்படுத்த முயல்கின்றனர் எனச் சுட்டியிருந்தது.



# மோடியின் வெற்றிக்கு ட்ரூடோவின் வாழ்த்து

ஒன்ராரியோ, ஜூன்06

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வாழ்த்து தெரிவித்துள்ளார்.

கனடா - இந்தியா உறவில் பதற்றம் அதிகமாக இருப்பதால், சட்டத்தின் முக்கியத்துவத்தை வலுப்படுத்த அவர் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டுள்ளார்.

'இந்தியாவில் உள்ள இந்த அரசாங்கம் இப்போது அதிக வெற்றிகளைப் பெற வேண்டும், மேலும் அவர்கள் கனடாவுடன் இணைந்து ஒரு தீர்மானத்தைப் பெறுவதற்கு மிகவும் தயாராக இருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன்' என்று மெக்டொனல்ட்-லொரியோ கல்வி நிறுவனத்தின் ஆய்வாளர் விஜய் சப்பானி கூறியுள்ளார்.

கனடாவிற்கும் இந்தியாவிற்கும் இடையே பெரிய அளவிலான வர்த்தகம் இருந்தபோதிலும், சில கனடியர்கள் இந்தியாவில் இருந்து பிரிக்கப்பட்ட காலிஸ்தான் என்ற தனி சீக்கிய தாயகத்திற்கு வாதிடுவதற்கான முயற்சிகளால் உறவுகள் பல ஆண்டுகளாக பதற்ற நிலையில் உள்ளன.

கடந்த இலையுதிர்காலத்தில் வான்கூவர் அருகே சீக்கிய ஆர்வலர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டதில் மோடியின் அரசாங்கத்திற்கு தொடர்பு இருப்பதாக ட்ரூடோ பகிரங்கமாக குற்றம் சாட்டியபோது அந்த பதற்றம் உச்சகட்டத்தை எட்டியது.

இந்த நிலையில், கனடா இந்தியாவுடன் இணைந்து பணியாற்றத் தயாராக இருப்பதாக ட்ரூடோ கூறியுள்ளார்.

ஆனால் இது 'மனித உரிமைகள், பன்முகத்தன்மை மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றுடன் தொகுக்கப்படும்' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஒரு மில்லியன் டொலர் பெறுமதியான போதைப் பொருள் கனடாவில் மீட்பு!




கனடாவின் ரெஜினாவில் ஒரு மில்லியன் டொலர் பெறுமதியான போதைப் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

கொக்கேய்ன், மெத்தம்பேட்டமைன், பென்டனைல் உள்ளிட்ட போதைப் பொருள்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் இரண்டு பேரை ரெஜினா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தேடுதல் வேட்டையின் போது 4 கிலோ கிராம் எடையுடைய பென்டனைல், 2.25 கிலா கிராம் எடையுடைய கொக்கேய்ன் மற்றும் 6.5 கிலோ கிராம் எடையுடைய மெத்தம்பேட்டமைன் என்பன இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

இந்தப் போதைப் பொருள்களின் சந்தைப் பெறுமதி சுமார் ஒரு மில்லியன் டொலர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



# இலவச வழங்கல் பல்பொருள் அங்காடி ரெஜினா நகரத்தில் திறக்கப்படுகின்றது

கனடாவில் உள்ள நகரமொன்றில் முற்றிலும் இலவச பல்பொருள் அங்காடி ஒன்று திறக்கப்பட உள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அந்த அங்காடியில், ஒரு குடும்பத்துக்கு ஒரு வாரத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் கூறப்படுகிறது.

கனடாவின் சஸ்காட்சுவான் மாகாணத்திலுள்ள ரெஜினா நகரில் அமைந்துள்ள ரெஜினா உணவு வங்கியின் வாடிக்கையாளர்களுக்காகவே இந்த ஏற்பாடு செய்யப்படுள்ளது.

கோவிட் தொற்றின் பின்னர், கனடாவில் உணவு வங்கிகளைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது.

இந்நிலையில், ரெஜினா நகரில் மாத்திரம் உணவு வங்கிகளை பயன் படுத்துவோரின் எண்ணிக்கை 25 சதவிகிதம் வரை உயர்வடைந்துள்ளது. இதனையடுத்தே, இந்த கோடை யில் இலவச பல்பொருள் அங்காடி ஒன்றை திறக்க திட்டமிடப்பட்டு வருகிறது.

இந்த பல்பொருள் அங்காடிக்கு பொருள்களைப் பெற்றுக்கொள்ள வருபவர்கள், தங்களின் சில அடிப்படை விவரங்களைக் கூறொ பதிவு செய்துகொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனை தொடர்ந்து, அனுமதி பெற்றதன் பின்னர் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை அவர்கள் இந்த பல்பொருள் அங்காடியில், 200 டொலர்கள் மதிப்புள்ள அத்தியாவசியப் பொருள்களை பெற்றுக்கொள்ள முடியும் என குறிப்பிடப்படுகின்றது.

